


உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, திண்டுக்கல் மாவட்டம், பழனியில் இருந்து திருப்பதிக்கு ஆன்மீக சுற்றுலா பேருந்து இயக்கத்தை பழனி தண்டாயுதபாணி இல்லத்திலிருந்து நேற்று முன்தினம் (19.07.2024) தொடங்கி வைத்தார். அருகில் பழனி சட்டமன்ற உறுப்பினர் இ.பெ.செந்தில்குமார், திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சச்சிதானந்தம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி பெ.திலகவதி, பழனி வருவாய் கோட்டாட்சியர் செள.சரவணன், பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் இணை ஆணையர் மாரிமுத்து, பழனி ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி ஈஸ்வரி கருப்பசாமி, பழனி நகர்மன்ற துணைத்தலைவர் கந்தசாமி, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மதுரை மண்டல அலுவலர் டேவிட்துரை, மாவட்ட சுற்றுலா அலுவலர் ஹ.கோவிந்தராஜ் உட்பட பலர் உள்ளனர்.



நீலகிரி மாவட்டம், உதகை ஊராட்சி ஒன்றியம், நஞ்சநாடு ஊராட்சி, போர்த்தியாடா பகுதியில் தென்மேற்கு பருவ மழையினால் சேதமடைந்த வீடுகள் அமைந்துள்ள பகுதிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று முன்தினம் (19.07.2024) நேரில் பார்வையிட்டு, பாதிப்புகள் குறித்து கேட்டறிந்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.லட்சுமி பவ்யா தண்ணீரு, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக் உட்பட பலர் உள்ளனர்.

### புதியதாக அமையவுள்ள சுதந்திரதின அருங்காட்சியகத்திற்கு

# நாமக்கல் கவிஞருக்கு 1945 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட வெள்ளிப் பேழை - வாழ்த்துப் பட்டயம்!

## நாமக்கல் கவிஞர் பேரன் முனைவர் இரா.அ.பழனியப்பன் - அமைச்சர்கள் தங்கம் தென்னரசு - மு.பெ.சாமிநாதனிடம் வழங்கினார்!

சென்னை, ஜூலை 21-

நிதி அமைச்சர் தங்கம்தென்னரசு மற்றும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சுவாமிநாதன் ஆகியோரிடம் 18.07.2024 அன்று, நாமக்கல் கவிஞர் அவர்களுக்கு 1945-ஆம் அண்டு வழங்கப்பட்ட வெள்ளிப் பேழை மற்றும் வாழ்த்துப் பட்டயத்தை புதிதாக அமையவுள்ள தமிழ்நாடு அரசின் சுதந்திரதின அருங்காட்சியகத்திற்கு நாமக்கல் கவிஞர் அவர்களின் பேரன் முனைவர் இரா.அ. பழனியப்பன் அவர்கள் வழங்கினார்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் 260 ஆண்டு கால தொடர் பங்களிப்பு குறித்து, எதிர்கால இளம் சமுதாயம் அறிந்து கொள்ளும் வகையில், நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய சுதந்திர தின அருங்காட்சியகம் சென்னையில் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் அவர் களால் 15.08.2022 அன்று 75-ஆவது சுதந்திர தின விழா உரையில் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, சென்னை மெரினா கடற்கரையின் எதிரில், பாரம்பரியக் கட்டடமான ஹுமாயூன் மஹால் கட்டடத்தில் சுமார் 80,000 சதுர அடி பரப்பளவில் பெரிய அளவில் இச்சுதந்திர தின அருங்காட்சியகம் அமைக்கப்பட உள்ளது.

ஜான்சிராணி ஆயுதமேந்தி போரிடுவதற்கு அரை நூற்றாண்டு முன்பாகவே தமிழகத்தில் வீரமங்கை வேலுநாச்சியார் விடுதலைப் போராட்டத்தை தலைமையேற்று நடத்தினார்கள். தாய் திருநாட்டிற்காக தங்கள் இன்னுயிரை ஈந்த சுதந்திரப் போராட்ட வீரர்கள் தமிழ் மண்ணில் தோன்றிக் கொண்டே இருந்தனர். அவர்களுள் செக்கிழுத்த செம்மல் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார், ஆங்கிலேயரக்கு எதிராக கடுமையாக போராடினார். அதற்கு பரிசாக அவருக்கு கடும் சிறைத் தண்டனை கிடைத்தது. பாரதியார் தனது இனிய தமிழ் பாடல்கள் மூலம் சுதந்திர உணர்வை தட்டி எழுப்பினார். மகாத்மா காந்தி அவர்களின் வருகைக்குப் பின்னால் தமிழகத்தில் சுதந்திரப் போராட்டம் தீவிரமடைந்தது. மூலை முடுக்கெல்லாம் விடுதலைத் தீ பரவியது.

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் அவர்கள் "கத்தியின்றி ரத்தம் இன்றி யுத்தம் ஒன்று வருகிறது" என்ற பாடலை பாடி தேசியத்தையும், காந்தியத்தையும் போற்றினார்கள். அது தான் உப்பு சத்தியாகிரகத்திற்கு எழுச்சிப் பாடலாக இருந்தது. மகாத்மா காந்தி அவர்களின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு அறப்போராட்டத்தால் மட்டுமே நாடு விடுதலையைப் பெற முடியும் என்று உறுதியாக நம்பினார். இவரது கவிதைகள் சுதந்திரப் போராட்டத்தைப் பற்றியும் அகிம்சையை பற்றியும் வலியுறுத்தியதால் இவர் காந்தியக் கவிஞர் என அழைக்கப்பட்டார்.

இவ்வாறு பாடுபட்டு பெற்ற சுதந்திரம் பற்றிய வரலாற்றை இன்றைய இளம் தலைமுறை அறிந்து கொள்ளும் வகையில் இந்த சுதந்திர தின அருங்காட்சியகத்தில், சுதந்திரப் போராட்டம் குறித்த பழங்கால ஆவணங்கள், கையெழுத்துப் பிரதிகள், செய்தித் தாள்கள், ஜெயில் வில்லைகள், இராட்டைகள், பட்டயங்கள், ஐ.என்.ஏ. சீருடைகள், ஐ.என்.ஏ. அஞ்சல் தலை மற்றும் ரூபாய் நோட்டுகள் போன்றவை காட்சியில் வைக்கப்பட உள்ளன. இதற்காக அரிய பொருட்கள் சென்னை மற்றும் 23 மாவட்ட அருங்காட்சியகங்களில் இருந்து திரட்டப்பட உள்ளது. இதில் பொதுமக்களின் பங்களிப்பு என்பது மகத்தானது.

அந்த வகையில் அருங்காட்சியகத்திற்கு நாமக்கல் இராமலிங்கம் அவர்களின் வாரிசான முனைவர் பழனியப்பன் அவர்கள், நாமக்கல் கவிஞர் அவர்கள் பயன்படுத்திய பல அரிய பொருட்களை குறிப்பாக அவரது ஆடைகள், அவர் பயன்படுத்திய கேமரா, மின் விசிறி மரப்பெட்டிகள் உள்ளிட்ட பல்வேறு பொருட்களை இந்த அருங்காட்சியகத்திற்கு நன்கொடையாக வழங்கி இருக்கிறார்கள். அவற்றில் அவர் வழங்கிய அரிய பொருட்களான வெள்ளியிலான பேழையில் உள்ள பட்டயம் வரலாற்று சிறப்பு வாய்ந்தது.

சென்னை நகர சபையினரால் 1945-ஆம் ஆண்டு நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் அவர்களுக்கு வெள்ளிப் பேழையில் வைக்கப்பட்ட பட்டுத் துணியிலான வாழ்த்துப் பட்டயத்தை வழங்கினார்கள். இந்த வெள்ளிப் பேழையை இத்தனை ஆண்டுகள் பாதுகாத்து வந்த கவிஞர் இராமலிங்கம் அவர்களின் பேரன் முனைவர் பழனியப்பன் அவர்கள் நிதி அமைச்சர் மற்றும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்களிடம் 18.07.2024 அன்று, சென்னை சேப்பாக்கம் ஹுமாயூன் மஹாலில் புதியதாக அமையவுள்ள சுதந்திர தின அருங்காட்சியகத்திற்கு வழங்கிடும் விதமாக வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, அரசு முதன்மை செயலாளர், முனைவர் பி. சந்திரமோகன், அருங்காட்சியகத்தின் ஆணையர், மா. அரவிந்த் மற்றும் அருங்காட்சியத் துறையின் உதவி இயக்குனர்கள் மற்றும் அலுவலர்கள் பங்கேற்றனர். மேலும், பாவலர் நாமக்கல் இரா.அ.பழனி யப்பன், கண்மணி பழனியப்பன், நடராஜன் அனுமந்நன், பாண்டியன் அனுமந்தன் ஆகிய நாமக்கல் கவிஞர் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

### பழனி - திருப்பதி ஆன்மீகச் சுற்றுலா பேருந்து திட்டத்தினை ஏற்படுத்தி

# மக்களின் மனம் கவர்ந்த முதல்வராக தளபதி திகழ்கிறார்!

## திட்டத்தை தொடங்கி வைத்து - அமைச்சர் அர.சக்கரபாணி பேச்சு!

பழனி, ஜூலை 21-

பழனி - திருப்பதி ஆன்மீக சுற்றுலா பேருந்து திட்டத்தினை ஏற்படுத்தி மக்களின் மனம் கவர்ந்த முதல்வராக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திகழ்கிறார் என உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி குறிப்பிட்டார்.

உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி - பழனி சட்டமன்ற உறுப்பினர் செந்தில்குமார் மற்றும் திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் சச்சிதானந்தம் ஆகியோர் முன்னிலையில் பழனியில் இருந்து திண்டுக்கல் வழியாக திருப்பதிக்கு ஆன்மீகச் சுற்றுலா பேருந்து இயக்கத்தை பழனி தண்டாயுத பாணி இல்லத்திலிருந்து 19.07.2024 அன்று தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சுற்றுலாத்துறையை மேம்படுத்திட பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். ஆன்மீக தலங்களை மேம்படுத்தும் வகையில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. முருக பெருமானின் அறுபடை வீடுகளுக்கு பக்தர்கள் எளிதாக சென்று வரும் வகையில், அறுபடை வீடுகளை இணைக்கும் வகையில் ஆன்மீக பேருந்துகள் தமிழக அரசு சார்பில் இயக்கப்படுகின்றன.

திண்டுக்கல் மாவட்ட மக்களின் வேண்டுகோளுக்கிணங்க திண்டுக்கல் மாவட்டத்தின் ஆன்மீக சுற்றுலாத்தலமான பழனியில் இருந்து திருப்பதிக்கு சுற்றுலா பேருந்து இயக்கம் இன்று(19.07.2024) தொடங்கி வைக்கப்படுகிறது. மொத்தம் 40 பயணிகள் பயணம் மேற்கொள்ளலாம். இன்றையதினம் பழனியில் இருந்து 10 பயணிகளும், திண்டுக்கல்லில் இருந்து 15 பயணிகளும் என 25 பயணிகள் பயணம் மேற்கொள்ள முன்பதிவு செய்துள்ளனர்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் இயக்கப்படும் இந்த பேருந்து வாரந்தோறும் வெள்ளிக்கிழமை இரவு 8.00 மணிக்கு பழனியில் இருந்து புறப்பட்டு, திண்டுக்கல் வழியாக சனிக்கிழமை காலை ராணிப்பேட்டை சென்றடையும். ராணிப்பேட்டையில் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதியில் சுற்றுலா பயணிகள் தங்களை தயார் செய்து கொண்டு, திருப்பதி சுற்றுலா பயணத்தை மேற்கொள்வார்கள்.

தமிழ்நாடு சுற்றுலா கழகத்திற்கு, திருப்பதி தேவஸ்தானம் சிறப்பு அனுமதியாக வழங்கியுள்ள விரைவு தரிசன அனுமதி சீட்டின் மூலமாக சுற்றுலா பயணிகள் தரிசனம் மேற்கொள்வார்கள். பின்னர் சுற்றுலா பயணிகள் அனைவருக்கும் நபர் ஒருவருக்கு திருப்பதி லட்டு ஒன்று வழங்கப்படும். மேலும் மதிய உணவுக்கு பின் திருச்சானூர் சென்று பத்மாவதி அம்மனை தரிசனம் செய்த பிறகு இராணிப்பேட்டை ஓட்டல் தமிழ்நாடு அமுதகம் உணவகத்தில் இரவு உணவு வழங்கப்படும். அங்கிருந்து சுற்றுலா பயணிகள் பயணத்தை தொடர்ந்து மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை திண்டுக்கல் வழியாக பழனி வந்தடையும் வகையில் இந்த ஆன்மீக சுற்றுலா பேருந்து இயக்கப்படுகிறது.

இந்த சுற்றுலா பயணத்திற்கான கட்டணம் குழந்தைகளுக்கு ரூ.4,600, பெரியவர்களுக்கு ரூ.5,000 எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சனிக்கிழமை 3 வேளை உணவு மற்றும் சிறப்பு தரிசன கட்டணம் உள்ளிட்டவை இக்கட்டணத்திற்குள் அடங்கும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் திருப்பதி சுற்றுலா பயணத்திட்டத்திற்கு முன்பதிவு செய்ய தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் www.ttdconline.com என்ற இணையதள பக்கத்திலும் அல்லது நேரடியாகவும் முன்பதிவு செய்யலாம். திருப்பதி சுற்றுலா குறித்த கூடுதல் விவரங்களை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தொலைபேசி எண்கள் (180042531111 (Toll free), 04425333333 மற்றும் 044 25333444) வாயிலாக தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம்.

தமிழக அரசு செயல்படுத்தும் இதுபோன்ற திட்டங்களை பக்தர்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இது போன்ற பல்வேறு சிறப்பு திட்டங்களை ஏற்படுத்தி செயல்படுத்துவதால் மக்களின் மனம் கவர்ந்த முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் அவர்கள் திகழ்கிறார்.

இவ்வாறு அமைச்சர் அர. சக்கரபாணி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திலகவதி, பழனி வருவாய் கோட்டாட்சியர் செள.சரவணன், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் இணை ஆணையர் மாரிமுத்து, பழனி ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் ஈஸ்வரி கருப்பசாமி, பழனி நகர்மன்ற துணைத்தலைவர் கந்தசாமி, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மதுரை மண்டல அலுவலர் டேவிட்துரை, மாவட்ட சுற்றுலா அலுவலர் கோவிந்தராஜ் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

### நீலகிரி மாவட்டத்தில், தென்மேற்குப் பருவ மழையினால் மண்சரிவு ஏற்பட்ட

# குட்டிமணிநகர் - வீடு சேதமடைந்த நஞ்சநாடு பகுதிகளில் ஆய்வு!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேரில் மேற்கொண்டார்!

நீலகிரி, ஜூலை 21-

நீலகிரி மாவட்டத்தில், தென்மேற்கு பருவ மழையினால் மண்சரிவு ஏற்பட்ட உதகை ஊராட்சி ஒன்றியம், முள்ளிகூர் ஊராட்சி, குட்டிமணிநகர் பகுதியினையும், வீடு சேதமடைந்த நஞ்சநாடு ஊராட்சிக்குட்பட்ட போர்த்தியாடா, மொட்டோரை ஆகிய பகுதிகளை சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று முன்தினம் (19.07.2024) நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு, உரிய நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தி, 3 குடும்பங்களுக்கு தனது சொந்த நிதியிலிருந்து தலா ரூ.4,000 நிவாரணத் தொகையினை வழங்கினார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலை வகித்தார்.

பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படியும், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களின் ஆலோசனையின்படியும், மாவட்ட நிர்வாகம் தென்மேற்கு பருவமழை முன்னேற்பாடுகளை சிறப்பாக மேற்கொண்டு வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக தென்மேற்கு பருவமழை தீவிரத்தின் காரணமாக அதிக மழை பெய்து வருகிறது. அதன் காரணமாக பல்வேறு இடங்களில் மண்சரிவு ஏற்படுகிறது. போர்த்தியாடா பகுதியில் மழையின் காரணமாக சேதமடைந்த வீட்டின் உரிமையாளருக்கு ரூ.8,000 நிவாரணம் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் எனது சொந்த நிதியிலிருந்து 3 நபர்களுக்கு தலா ரூ.4,000 வழங்கப்பட்டுள்ளது. மேலும், இந்த பகுதிகளுக்கு தேவையான தடுப்புச்சுவர் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில், தென்மேற்கு பருவமழை தொடர்ந்து பெய்து வரும் நிலையில், மாவட்டத்தில் 51 வீடுகள் பகுதி சேதமடைந்தும், 3 வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளது. 01.06.2024 முதல் தற்போது வரை மழை காரணமாக சேதமடைந்த 54 குடியிருப்புகளுக்கு இழப்பீட்டுத்தொகையாக தலா ரூ.8,000 வீதம் ரூ.4.32 இலட்சம் நிவாரணத்தொகை வழங்கப்பட்டுள்ளது. அதேபோல், கடந்த 4 நாட்களாக நமது மாவட்டத்தில் பெய்த மழை மற்றும் காற்றின் காரணமாக 19 இடங்களில் மண்சரிவும், 52 மரங்களும் விழுந்துள்ளது.

மேலும், நெடுஞ்சாலைத் துறை, வருவாய்த்துறை, தீயணைப்புத்துறை, தமிழ்நாடு மின்சார வாரியம் உள்ளிட்ட துறை அலுவலர்கள் போர்க்கால அடிப்படையில் சீரமைப்பு பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். மேலும், 3 மாநில பேரிடர் மீட்புக் குழுவினர் ஆகியோர்; குந்தா, கூடலூர் மற்றும் பந்தலூர் ஆகிய பகுதிகளில் தயார் நிலையிலிருந்து, மழை மற்றும் காற்றின் காரணமாக சாலையில் விழும் மரங்களை உடனடியாக அப்புறப்படுத்தி, பொதுமக்களுக்கு எவ்வித சிரமமின்றி சீர் செய்து வருகிறார்கள். நேற்றைய தினம் இத்தலார் பகுதியில் தடுப்புச்சுவர் இடிந்த பகுதி வருவாய்த்துறையினருடன் இணைந்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

இன்றைய தினம் குட்டிமணி நகர், போர்த்தியாடா, மொட்டோரை ஆகிய மழையினால் பாதிக்கப்பட்ட இடங்கள் ஆய்வு செய்யப்பட்டது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் அனைத்து முன்னேற்பாடு பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக் உதகை வருவாய் கோட்டாட்சியர் மகராஜ், உதகை ஊராட்சி ஒன்றியத்தலைவர் மாயன் (எ) மாதன், வட்டாட்சியர்கள் சரவணகுமார் (உதகை), திருமதி.கலைச்செல்வி (குந்தா), உதகை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அண்ணாதுரை, சலீம், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் ஜார்ஜ் உட்பட பலர் உடனிருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கட்பீஸ் அ. பழனி
### ஜூலை 21 (2019)



இளமைக் காலம் முதலே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.

வடசென்னை மாவட்டம், சார்பு மன்ற நிர்வாகி, 10வது வட்ட பகுதிப் பிரதிநிதி, இராயபுரம் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர், 1996 முதல் 2016 வரை தொடர்ந்து இராயபுரம் பகுதிச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

2006ல் சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்கள் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ர. லோகநாதன்
### ஜூலை 21 (2022)



இளமைக் காலம் முதலே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.

எழும்பூர் பகுதியில் அண்ணா படிப்பகச் செயலாளராகவும் தொடர்ந்து பகுதிப் பிரதிநிதி, வட்டச் செயலாளர், மாவட்டப் பிரதிநிதி என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

சென்னை தொலைபேசி ஆலோசனைக்குழு உறுப்பினராக இருந்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.